

# கோவையில் செயல்பாடு

இம்மானுவேல் ஆலயம் பாடகர்குழு பொறுப்பாளர் தமிழ்க் கிறிஸ்தவக் கீர்த்தனைகள் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்பக்தி இசை உலகுட்கே கிடைத்த மரபுப் பெட்டகங்கள் எனலாம்.

ஆனால் இன்று இக்கீர்த்தனைகளின் அருமையும் பெருமையும் நன்குணரப்படாமல் அவற்றின் பயன்பாடு, தமிழ்க் கிறிஸ்தவர்களின் வழிபாடுகளிலும் அருகிவிடும் அவலம் நேர்ந்து வருகிறது. பெற்ற தாயை சொந்தப் பிள்ளைகளே பேணி வளர்க்காத கொடுமை. இந்நிலை கிறிஸ்தவரல்லாத பிற தமிழரும், தமிழிசை வாணரும், இவற்றைப் போற்றிப் பயன் கொள்வது எப்படி சாத்தியமாகும். இந்நிலையை மாற்றிட, தமிழுணர்வும் இறையுணர்வும் வாய்ந்த அன்பர்கள் பலரும் பக்தி நோக்கிலும் இசை நோக்கிலும் மொழி நோக்கிலும் கிறிஸ்தவக் கீர்த்தனைகளின் பெருமைகளைப் பறை சாற்றி தமிழ்க் கிறிஸ்தவ அன்பர்கள் அவலத்தைத் தடுக்கும் முறையில் பயன்கொள்ள, இந்த அருமையான கீர்த்தனைக் கமிட்டி மிகச் சிறப்பாக சில ஆண்டுகளாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் இப்படி பல கீர்த்தனை விழாக்களை நடத்தி செயல்பட ஆசிக்கின்றேன். நாமும் கீர்த்தனையை வருகின்ற நாட்களில் மிகச் சிறப்பாய் பாட அனைவருக்கும் வாய்ப்புகள் கிடைத்திடும், கீர்த்தனைகளைப்பற்றி மற்றவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டலாம்.

வருகின்ற நாட்கள் இன்னும் மிகச்சிறப்பாய் அமையும் என்று வாழ்த்துக்கள் கூறி முடிக்கின்றேன்.

## இசையும் உருவான விதமும்

இசையில் ஒரு பாடலுக்கு ஏழுஸ்வரங்களுமே வந்தால், அதை சம்பூர்ண ராகமாக அழைக்கிறோம். அப்படி ஏழுஸ்வரங்கள் வராமல் விடுபட்டு ஸ்வரங்கள் வந்தால் அவற்றை ஜன்யராகம் என்று அழைக்கிறோம். இசையில் இராகங்கள் பல்வேறு ராகங்களை கொண்டதாக இருந்தாலும், தாளங்கள் மட்டும் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சதுஸ்வரம் | = | தகதிமி | - | 4 |
| 2. | திஸ்ரம் | = | தகிட | - | 3 |
| 3. | மிஸ்ரம் | = | தகிடதகதிமி | - | 7 |

4. கண்டம் = தகதகிட - 5
5. சங்கீர்ணம் = தகதிமிதகதகிட - 9

இந்த ஐந்து வகையானவைகளில் சதுஸ்ரம், திஸ்ரம், மிஸ்ரம் - இந்த மூன்று வகைதான் நம்முடைய கீர்த்தனைகளில் அமைந்திருக்கின்றன.

மகரந்த நறுமணத்தில் கட்டைக்குள் காற்று நுழைந்து, உள் அழுத்தத்தால் உருவாகும் இசை எட்டாவது இசையாகும். மகரந்த இசையானது மனதை தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்லும் ஆற்றலுடையது.

ஞான சித்தியில் மவுன நிலையில் நிசப்த சங்கீதமாய் உருவாகும் இசை ஒன்பதாவது இசையாகும். இதற்கு ஞான இசை என்று பெயர். ஞானிகளால் மட்டுமே இந்த இசையின் தன்மையை உணர முடியும், முற்றும் பற்றறுந்த நிலையில் மனம் ஒரு நிலைப்படுத்தப்பட்டு, ஜோதி மயமாய் ஒளிரும் போது உருவாகும் இசையே பத்தாவது இசையாகும். இந்த இசையே யோக இசை ஆகும்.

சப்த ஸ்வரலயத்தில் மனதை கட்டுப்படுத்தும் தியான நிலையே இசையாகும். நதிக்கரையில் இசை பிறந்ததாக ஒரு வரலாறு உண்டு. பொதுவாக கழுத்தளவு தண்ணீரில் நின்று சாதகம் செய்ய வேண்டும் என்பார்கள். மலையில் இருந்து விழுந்து எழுந்து நடந்து, வளைந்து, நெளிந்து நளின பாவத்தோடு செல்லும் அருவியின் அழகைக் கண்டு நாம் மகிழ்வோம். அருவியின் அழகிய ஓட்டத்தில் ஒரு இசையின் பாவம் இருப்பதாலேயே நாம் அதில் வசியமாகிறோம். மலைமேலிருந்து குப்புற விழுகின்ற அருவி, நீண்டு குறுகி, அகன்று தன் போக்கை மாற்றி ஓடுகின்ற பாவனையோடு இசையின் பாவனை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். அதனால் தான் நீரில் நின்று சாதகம் செய்கின்ற பயிற்சி முறை உருவானது. நதியின் அல்லது அருவியின் ஓட்டத்துக்கு தகுந்தபடி இசையின் தன்மையை உணர்ந்து குரலை மாற்றி ஏற்ற இறக்கத்தோடு நளினப் பாவத்தோடு இசை பாட வேண்டும் என்பதற்காகவே இப்பயிற்சி முறை உருவானது.

தே.விஜயகுமார்

இசை கலைஞன